

கன்னியாகுமரி மாவட்டம் திரும்பிய 19 மீனவர்கள் குடும்பத்துடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (15.07.2016) நேரில் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர். மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி., தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 452/2016 நாள்: 15.07.2016

**கன்னியாகுமரி மாவட்டம்**

**தாயகம் திரும்பிய 19 மீனவர்கள் குடும்பத்துடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர்.**

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) நாட்டிலுள்ள அஜ்மன் நகரில் விசைப்படகில் மீன்பிடித் தொழில் செய்து வந்த கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த 19 மீனவர்கள் 13.04.2016 அன்று ஆழ்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபொழுது எதிர்பாராத விதமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) நாட்டை சேர்ந்த திரு. கமீஸ் கடலில் தவறி விழுந்துவிட்டதால், கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் விசைப்படகுகளில் சிறை வைக்கப்பட்டு மீன்பிடித் தொழில் செய்ய அனுமதி மறுக்கப்பட்டனர். இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு பெரும் முயற்சியினாலும், இந்திய தூதரகத்தின் நடவடிக்கையாலும் அஜ்மன் நகரிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 8 மீனவர்கள் 13.07.2016 அன்றும், 11 மீனவர்கள் 15.07.2016 இன்று என மொத்தம் 19 மீனவர்கள் சொந்த கிராமத்திற்கு திரும்பியுள்ளனர்.

சொந்த ஊர்களுக்கு திரும்பிய 19 மீனவர்கள் குடும்பத்துடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களை நேரில் சந்தித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றிகளை தெரிவித்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி., தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், துணை இயக்குநர் திரு. வே. லாமேக் ஜெயக்குமார், உதவி இயக்குநர் திரு. ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.